<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 76/2022**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய வீரையன் **PW2.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 13.03.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | வீரையன் | | |
| Father /Husband Name | : | பெருமாள் | Court | : |
| Village | : | பரசலூர் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 66/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

இந்நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 3 ஆன கிரய உடன்படிக்கையில உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் **வா.சா.ஆ 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.